ஆம்பூர் நகராட்சி

2020–ஆம் வருடம் ஜனவரி மாதம் 3–ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்டத்தின் நடவடிக்கைகள்,

முன்னிலை: திரு,த,சௌந்தரராஜன்,பி,ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி

1. இந்நகராட்சியில் 2019–20 ஆம் ஆண்டு 14வது நிதிக்குழு ($14^{th}$ CFC) திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட பணி முடிவடைந்துள்ள கீழ்க்கண்ட பகுதிகளில் புதியதாக சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் அமைக்க வேண்டி ரூ.358.85 இலட்சம் மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ..எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 09 நதிசீலாபுரம் பகுதி, கே.எம். நகர் 1வது தெரு, 2வது தெரு மற்றும் 3வது தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 43.50 |
| 2 | வ்ர்டு எண்.8 மற்றும் 9 ஆயிஷா பீ நகர் 2வது தெரு, 3வது தெரு மற்றும காஜா நகர் 1வது தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 44.50 |
| 3 | வாார்டு எண்.8, 9 மற்றும் 28 கே.எம். நகர் 4வது தெரு, காஜா நகர் 2வது தெரு மற்றும் நடராஜபுரம் மாரியம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 31.00 |
| 4 | வார்டு எண்.8 பன்னீர் செல்வம் நகர் 2வது தெரு, 3வது தெரு, 4வது தெரு மறறும் 5வது தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 44.00 |
| 5 | வார்டு எண்.29 ரெட்டி தோப்பு 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு மறறும் 4வது தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 42.50 |
| 6 | வார்டு எங்ண.29 ரெட்டி தோப்பு 5வது, குறுக்கு தெரு மறறும் மக்கா நகர் ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 23.50 |
| 7 | வார்டு 2 மற்றும் 3 கூபா மசூதி 1வது தெரு, 2வது தெரு, 5வது தெரு மறறும் வாத்திமனை 10வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 37.50 |
| 8 | வார்டு எண்.3 வாத்திமனை 4வது தெரு, 5வது தெருஇ 6வது தெரு, 9வது தெரு மற்றும் 7வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 35.00 |
| 9 | வார்டு எண்.35 சாது தெரு மற்றும் அண்ணாமலையார் தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 28.00 |
| 10 | வார்டு எண்.2 ஜலால்பேட்டை 2வது தெரு மற்றும் குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 29.35 |

அலுவலக குறிப்பு

அ) அங்கீகாரம் வழங்கலாம்

ஆ) மேற்காணும் பணிகளுக்கு மண்டல பொறியாளர், வேலூா் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெற அனுமதிக்கலாம்.

இ) மேற்காணும் திட்டத்திற்கு அரசு மான்யமாக 358.85 இலட்சம் பெற்று திட்டம் நடைமுறைபடுத்த அங்கீகாரம் வழங்கலாம்.

ஈ) வரவு செலவு திட்டம் 2019ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1/16/2020**

தீர்மான எண்–1. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/–த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி

ஆம்பூர் நகராட்சி

2020-ம் வருடம் ஜனவரி மாதம் 24-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அம்ருத் (Amrut) திட்டத்தின் கீழ் தொகை ரூ.165.55 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணியினை மேற்க்கொள்ள அரசாணை நிலை எண்.5 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 22.01.2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்புநிதி சேவை நிறுவனம், சென்னை (TNUIFSL) மூலம் ரூ.165.55 கோடி மதிப்பீடப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கிக்கு (ADB) பரிந்துரைக்கப்பட்டதில் விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலைக் குறைபாடுகள் (PHYSICAL AND PRICE CONTINGENCIES) காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகளின்படி ரூ.143.21 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு திட்டத்திற்கான நிதி இயலுமைத்தன்மை அறிக்கை (Finance Viability) தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை (TNUIFSL) மூலம் கணக்கிடப்பட்டு பின்வருமாறு அம்ருத் திட்டத்தின் கீழ் இந்திய அரசு மற்றும் தமிழக அரசால் மானியம் வழங்கப்படவுள்ளது.

1. **ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) திட்டமதிப்பீடு (ரூ. கோடியில்)**

| | |
|---|---|
| Contract Package cost including GST @ 12% (Base cost) | 107.48 |
| Labour Welfare Fund (1% of Base cost) | 1.07 |
| Physical Contingencies | 5.37 |
| Price Contingencies | 9.26 |
| Provisional Items (Utility Shifting, Resettlement etc.,) | 20.03 |
| **Total Sub Project Cost** | **143.21** |

2. இயக்குதல் மற்றும் பராமரித்தல் (O&M Cost) – ரூ.2.06 கோடி (ஓராண்டிற்க்கு)

3. இணைப்புகள், வைப்புத் தொகை மற்றும் கட்டணம் (Connections, Deposit and Tariff)

| Details | Existing | | | Proposed Tariff | | |
|---|---|---|---|---|---|---|
| | Domestic | Non Domestic | Industrial | Domestic | Non Domestic | Industrial |
| No. of Connections | -- | -- | -- | 16000 | 1767 | 20 |
| Deposit | -- | -- | -- | 8206 | 9702 | 100000 |
| Weighted average Tariff (Month) | -- | -- | -- | 141 | 278 | 1500 |

1. மேற்படி தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்புநிதி சேவை நிறுவனம், சென்னை (TNUIFSL) கடிதம் TNUDF/Projects/TNUFIP-T2/Ambur UGSS dt.13.01.2020 தேதிய கடிதத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் (ADB Assisted Tamil Nadu Urban Flagship investment program-(TNUFIP) Tranche– 2 மூலம்

பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த பின்வரும் நிதி இயலுமைத் தன்மை மற்றும் கட்டணங்களை நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.



அ. நிதி ஆதாரம் (Means of Finance)

| Sl.No. | Details | Amount (Rs. In cr) | Percentage |
|---|---|---|---|
| 1 | GoI Share under AMRUT | 64.54 | 45.07% |
| 2 | GoTN Share Under AMRUT | 25.81 | 18.02% |
| 3 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) Under ADB Assisted TNUFIP–T2 | 8.80 | 6.15% |
| 4 | Grant from Project sustainability grant fund (PSGF) Under ADB Assisted TNUFIP–T2 | 26.70 | 18.64% |
| 5 | ULB Contribution | 17.36 | 12.12% |
| | **Total** | **143.21** | **100%** |

ஆ. உத்தேச வைப்புத் தொகை மற்றும் கட்டணம் (Proposed Deposit and Tariff)

| Plinth Area of Assessment in Sq.ft. | Proposed Deposit (Rs) | | | Proposed Tariff (Rs) | | |
|---|---|---|---|---|---|---|
| | Domestic | Non Domestic | Industrial | Domestic | Non Domestic | Industrial |
| < 500 | 7500 | 15000 | 15000 | 105 | 315 | 315 |
| 501- 1200 | 10000 | 20000 | 20000 | 125 | 375 | 375 |
| 1201 – 2400 | 12500 | 25000 | 25000 | 145 | 435 | 435 |
| 2401 | 15000* | 30000* | 30000* | 165* | 495* | 495* |
| Wt Average | 8185 | 16754 | 30000 | 110 | 336 | 495 |
| *This is the base rate for the plinth area of 2401 sq.ft. the deposit and tariff for plinth area above 2401 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | | | |

1. திட்ட மதிப்பீட்டில் 12.12% சதவீகித தொகை நகராட்சி பங்களிப்பாக ரூ.17.36 கோடி திட்டப் பணிகளின் கட்டுமான பணி நடைபெறும் போது நகராட்சி பங்களிப்பு செலுத்தப்பட வேண்டும்.
2. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை (Every Five Years) 10% சதவீகித வைப்பு தொகை மற்றும் சேவை கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும்.
3. திட்டப்பணி கட்டுமானம நடைபெறும் போது நகராட்சி பொது நிதியிலிருந்து வட்டி செலுத்தப்பட வேண்டும்.
4. எதிர்காலங்களில் வரி வசூல் மூன்று வருடத்திற்குள் 80 சதவீகித்திற்கு குறையாமலும் மற்றும் அதற்கு மேலும் வரி வசூல் செய்யப்பட வேண்டும்.

இதனை தொடர்ந்து மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை (TNUIFSL) அவர்களது கடிதம் TNUDF/Projects/TNUFIP-T2/Ambur UGSS dt.13.01.2020 தேதிய கடிதத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் (ADB Assisted Tamil Nadu Urban Flagship investment program-(TNUFIP) Tranche– 2 மூலம் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கும், அரசின் நிர்வாக

அனுமதி பெறுவதற்கும், இத்திட்ட பணிக்கு கடனுதவி பெறுவதற்கும் மற்றும் அதற்கான விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அனுப்பி வைப்பதற்கும் அங்கீகாரம் கோரப்படுகிறது.



அலுவலக குறிப்பு :

1. அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை (TNUIFSL) அவர்களது கடிதம் TNUDF/Projects/TNUFIP-T2/Ambur UGSS dt.13.01.2020 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.
3. மேற்படி திட்டப்பணி மேற்க்கொள்வதற்காக ஏற்படுத்தப்படவிருக்கும் அனைத்து ஒப்பந்த பத்திரத்திலும் நகராட்சி ஆணையாளர் ஒப்பம் செய்வதற்கான முழு உரிமை வழங்கிட அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1742/இ2/2016

தீர்மான எண்.2:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந் நகராட்சியில் 2019-2020ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்க்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு வரப்பெற்றுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.அ2/3394/2019 நாள்.26.12.2019-ஐ தகவலுக்கு வைக்கப்படுகின்றது.

| எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பை-பாஸ் சாலையில் ராஜீவ் காந்தி சிலை அருகில் 8 எண்ணிக்கை LED தெருவிளக்குகள் அமைத்தல். | 10.00 |
| 2 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பை-பாஸ் சாலையில் விநாயகர் கோயில் அருகில் 8 எண்ணிக்கை LED தெருவிளக்குகள் அமைத்தல். | 10.00 |
| 3 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பை-பாஸ் சாலையில் முருகன் திரையரங்கம் அருகில் 8 எண்ணிக்கை LED தெருவிளக்குகள் அமைத்தல். | 10.00 |

மேற்படி பணிக்கு 23.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பை-பாஸ் சாலையில் ராஜீவ் காந்தி சிலை அருகில் 8 எண்ணிக்கை LED தெருவிளக்குகள் அமைத்தல். | 10.00 | 1.M/S,ராயல் ஏஜென்சீஸ், வேலூர்.<br><br>2.M/S.இண்டியன் ஏஜென்சீஸ், வேலூர். | 0.17% மதிப்பீட்டைவிட குறைவு<br>3.19% மதிப்பீட்டைவிட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அதிகம் |
| 2 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பை-பாஸ் சாலையில் விநாயகர் கோயில் அருகில் 8 எண்ணிக்கை LED தெருவிளக்குகள் அமைத்தல். | 10.00 | 1.M/S,ராயல் ஏஜென்சீஸ், வேலூர்.<br><br>2.M/S.இண்டியன் ஏஜென்சீஸ், வேலூர். | 0.17% மதிப்பீட்டைவிட குறைவு<br>3.19% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பை-பாஸ் சாலையில் முருகன் திரையரங்கம் அருகில் 8 எண்ணிக்கை LED தெருவிளக்குகள் அமைத்தல். | 10.00 | 1.M/S,ராயல் ஏஜென்சீஸ், வேலூர்.<br><br>2.M/S.இண்டியன் ஏஜென்சீஸ், வேலூர். | 0.17% மதிப்பீட்டைவிட குறைவு<br>3.19% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: அ. பதிவு செய்யலாம்.
ஆ. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் M/S,ராயல் ஏஜென்சீஸ், வேலூர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.1054/2019/இ1
தீர்மான எண்.3:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. புதியதாக தோற்றுவிக்கப்பட்ட திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களை தொடங்கி வைத்து அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க வருகை தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வரவேற்கும் விதமாக விழா அழைப்பிதழை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணத் தொகையை கீழ்குறிப்பிட்டுள்ளவாறு அந்தந்த நாளிதழ்களுக்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | விளம்பர கட்டணத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினதந்தி | 23,940/- |
| 2. | தினகரன் | 24,780/- |
| 3. | மாலைமலர் | 18,900/- |
| 4. | தினமலர் | 23,940/- |
| 5. | தினமணி | 25,200/- |
| 6. | மாலை முரசு | 14,700/- |
| 7. | மாலை தமிழகம் | 14,700/- |
| 8. | ஆம்பூர் செய்திகள் | 16,000/- |

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி விளம்பர கட்டணத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.1254/2019/இ1
தீர்மான எண்.4:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.14-ல் நல்லகாம தெருவில் மழைநீர் வடிகால்வாய் இல்லாமையாலும், காசி தெரு மற்றும் தேவு தெரு சந்திப்பில் சிறுபாலம் இல்லாமையாலும் மழைகாலங்களில் தெருக்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் பெறும் இடையூறு ஏற்படுகிறது.எனவே,மேற்படி இடங்களில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கவும், அதற்காகும் தோராய மதிப்பீடு தொகை ரூ.6.10 இலட்சத்திற்கும் (ரூபாய் ஆறு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.20/2020/இ1
தீர்மான எண்.5:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.36-ல் சாமியார் மடம் பகுதியில் பிரதான சாலையில் கடைசி பகுதியில் உள்ள பிரதான கால்வாயில் பாலம் இல்லாமையால் மழைகாலங்களில் தெருவில் மழைநீர் பெருக்கெடுத்து செல்வதால் பொதுமக்கள் சாலையை கடக்க இயலாமல் உள்ளது. மேலும் போக்குவரத்திற்கும் பெரும் இடையூறாக உள்ளது.எனவே, மேற்படி பிரதான கால்வாயில் பாலம் அமைக்கவும், அதற்காகும் தோராய மதிப்பீடு தொகை ரூ.7.20 இலட்சத்திற்கும் (ரூபாய் ஏழு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.368/2020/இ1
தீர்மான எண்.6:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.34-ல் உள்ள ஆதிதிராவிட மாணவர்கள் தங்கும் விடுதி அமைந்துள்ள பிரதான சாலையின் வடக்கு பகுதியில் உள்ள 2-வது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் இல்லாமையால் மழைகாலங்களில் தெருக்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் பெறும் இடையூறு ஏற்படுகிறது.எனவே,மேற்படி இடங்களில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கவும், அதற்காகும் தோராய மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கும் (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.368/2019/இ1
தீர்மான எண்.7:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.4-ல் காரிய மண்டபம் அருகில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மீது குறுக்காக உள்ள பழைய சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக சிறுபாலம் அமைக்கவும், நெசவுக்கார 1-வது தெருவில் உள்ள பழுதடைந்துள்ள பழைய சிறுபாலத்தையும், கஸ்பா.அ பிரதான சாலையில் அப்புகான் தெரு முதல் அருள்மிகு ரேணுகாம்பாள் கோவில் முன்புறம் வரை பழுதடைந்த மழைநீர் வடிகால்வாயினையும் புதியதாக

அமைக்கவும் அதற்காகும் தோராய மதிப்பீடு தொகை ரூ.8.80 இலட்சத்திற்கும் (ரூபாய் எட்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.369/2019/இ1
தீர்மான எண்.8:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8.இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பிரதான சாலையில் பொருத்தப்பட்டுள்ள பழைய மின்விளக்குகள் குறைவான வெளிச்சம் உள்ளதால், பழைய மின்விளக்குகள் 50 எண்ணிக்கை அகற்றி புதியதாக LED மின்விளக்குகளை மற்றும் இதர மின் உபகரணங்களை பொருத்திடும் பணிக்காகும் உத்தேச செலவினத் தொகை ரு 8.50 லட்சத்திற்க்கு அங்கிகாரம் கோரப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்: 119/இ2/2020
தீர்மான எண்.9:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந்நகராட்சியில் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்க்கொள்ள ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது.

| பணயின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| இந் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு குடிநீர் டிராக்டர் எண் TN23-Y8707 & டிரைலர் எண் TN23 AQ0277-க்கு தகுதிச்சான்று பெற பழுது பார்ப்பு பணி மேற்கொள்ளுதல். | 110,000/- |

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியத்தை கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று 27.12.2019-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| பணிமனை பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|
| 1.திரு. கே. சங்கர்,<br>கே.எஸ்.ஆர்.டிங்கரிங் ஒர்க்ஸ், ஆம்பூர் | 109,800/- |
| 2.விஜய் டிராக்டர் ஒர்க்ஸ், பைபாஸ் சாலை, ஆம்பூர் | 113,000/- |

அலுவலகக்குறிப்பு:

1. மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண். 701/இ2/2019**

தீர்மான எண்.10:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூர் அவர்களிடம் இருந்து வரப்பெற்ற கடிதத்தில் 2019-2020-ஆம் ஆண்டுக்கான நகராட்சி பங்குத்தொகை ரூ.90,000/-ஐ (ரூபாய்.தொண்ணூறாயிரம் மட்டும்) செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களுக்கு செலுத்த ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.2360/சி1/2010

தீர்மான எண்.11:- அனுமதிக்கப்பட்டது.

10. இந் நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 29.11.2019-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி உரகிடங்கு பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உர செயலாக்க மையத்தில் உள்ள கழிவறைக்கு நச்சுநீர் தொட்டி அமைத்தல்,செராமிக் டைல்ஸ் பதித்தல், வர்ணம் அடித்தல் மற்றும் மைய முன் பகுதியில் சிமெண்ட்தளம் அமைத்தல். | 4.50 | 1.எஸ்.அருணாசலம்<br><br>2.ஏ.வி.நாகராஜன் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>1.20% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | நகராட்சி உரகிடங்கு மேற்கு பகுதியில் உள்ள உரம் தயாரிக்கும் மேடைக்கு செல்லும் மண்பாதையை சிமெண்ட்தளமாக அமைத்தல் | 7.75 | 1.எம்.தீனதயாளன்<br><br>2.ஆர்.இசைசெல்வ மூர்த்தி | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>0.90% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக குறிப்பு:-அ) வ.எண்.1-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு. எஸ்.அருணாசலம் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ)வ.எண்.2-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.தீனதயாளன் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.18/2019/இ1

தீர்மான எண்.12:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி